அங்கு வைத்திருக்கிற 3 இடங்கள் கூட அந்தக் கல்லூரியில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தனிப்பட்ட மாணவர்கள் அங்கு படிக்க முடியாது. குறிப்பாக, ஏழைகள் எம். பார்மசி படிக்க முடியாது. இதனால் செல்வம் உள்ளவர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று எம். பார்மசி படிக்கிறார்கள். மருந்து தொழிற்சாலைகளில் எம். பார்மசி பட்டம் தேவை என்று வைத்திருப்பதால், பிற மாநிலங்களில் எம். பார்மசி படித்த பட்டதாரிகள் இங்கு வருகிறார்கள்.

அமைச்சர் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டமோ அல்லது பதவி உயர்வு இல்லையென்ற பிரச்னையோ இல்லை யென்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் டிரக் இன்ஸ்பெக்டர் களாக இருப்பவர்கள் அசிஸ்டெண்ட் டிரக் கன்ட்ரோலர்கள் பதவி பெறுவதற்கு எம். பார்மசி குறைந்தபட்சத் தகுதியாகும். ஆகவே, எம். பார்மசி பாடத்தை, புகழ்பெற்ற தமிழ்நாட்டில் துவக்கு வதற்கு விரைவில் அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அதைச் செய்ய இருக்கிறோம். இந்தக் குறைகூட என்னிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக எம். பார்மசி தேவைப்படுகிறது என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன். ஆகவே, வெகு விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று மாண்புமிகு பேரவை முன்னவர் கோருவார்.